




https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

22nd OCTOBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 50



# வடக்கு – கிழக்கில் தனியான தமிழ் ஜனாதிபதி வேட்பாளர்




எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு – கிழக்கில் இருந்து தனியான ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு 02 ▶

## ஜனாதிபதி தேர்தல்: கட்டுப்பணம் அதிகரிப்பு




அதிகமான வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கான கட்டுப்பணத் தொகை அதிகரிக்கப்பட்வுள்ளது.

அதன்படி,கட்சி ஒன்றின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் கட்டுப்பணம் 25 லட்சம் ரூபாவாகவும் சுயேச்சை வேட்பாளரின் கட்டுப்பணத்தொகை 30 லட்சம் ரூபாவாகவும் அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த யோசனைக்கு சபாநாயகர் கையெழுத்திட்டுள்ளார் என்று தேர்தல் ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த யோசனை விரைவில் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. 02 ▶

## அரச அதிகாரிகளின் வாகனங்கள் எரிபொருள்களுக்கு கடும் கட்டுப்பாடு




அரச அதிகாரிகள்,பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் வாகன பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் அடிப்படையில் ஓர் 02 ▶

## இரண்டாயிரம் தொழில்சாலைகளுக்குப் பூட்டு

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் இரண்டாயிரம் தொழில்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த வருடம் மாத்திரம் 5 லட்சத்து 33 ஆயிரம் பேர் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர்.

இதனால் தொழில் தேடி நாட்டை விட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த வருடம் மாத்திரம் கிட்டத்தட்ட 3 லட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.




புதுசுடர்
www.puthusudar.lk
2023 OCTOBER 22 - SUNDAY

# அடிமேல் அடி

இந்த வாரம் அதிக பேசு பொருளாக மாறியுள்ள விடயங்களுள் ஒன்று மின்கட்டண அதிகரிப்பாகும். 14 மாதங்களில் மூன்றாவது தடவையாக இந்த அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த மின்கட்டண அதிகரிப்பு என்பது மக்களை மேலும் சிக்கலுக்குள் தள்ளிவிடுவதாக அமைந்துள்ளது. பொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறத் தொடங்கியுள்ளனர். முடிவே இல்லாமல் விலையேற்றத்தைத் தவிர வேறு எந்த மாற்றமும் நிகழ்வதாக இல்லை.

பணக்காரர்களால்கூட வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.ஏழைகளின் நிலைபற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

மக்கள் எந்தப் பக்கமும் நகர முடியாமல் இறுகிப்போய் நிற்கிறார்கள்.தீர்வு என்ற கதைக்கே இடமில்லை.அரசாங்கம் அரசாங்கத்தின் பிரச்சினைக்கான தீர்வை மட்டும்தான் முன்வைக்கிறது.மக்களின் பிரச்னைக்கு எந்தத் தீர்வும் கிடையாது.

புதிய ஜனாதிபதியால் இந்த நாட்டுக்கு-நட்டு மக்களின் பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்ட தீர்வு என்ன? இவர் பதவி ஏற்றதால் மக்கள் அடைந்த நன்மை என்ன?

கோத்தா இருக்கும்போது என்ன நடந்ததோ அதுதான் இப்போதும் நடக்கிறது.அதைவிட மோசமாக நடக்கிறது. போனவரும் அப்படியே வந்தவரும் அப்படியே.

எரிபொருள் வரிசை இல்லாமலாக்கப்பட்டமைதான் மக்களின் பிரச்சனைக்கான சரியான தீர்வு என்பதுபோலவும் அதைச் செய்தது பெரிய சாதனைப்போலவும் கூறிக்கொண்டு திரிகிறது இந்த அரசு.

மக்கள் வீதிக்கு இறங்கி போராடி கோத்தாவை விரட்டியடித்து பெற்றுக்கொண்ட நன்மை என்ன? எதுவும் இல்லை.மாறாக மேலும் பிரச்சினையைத் தேடிக்கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

கோத்தாவை விரட்டிய மக்கள் ரணிலைக் கண்டதும் அப்படியே போராட்டத்தை நிறுத்திக்கொண்டனர்.அவர் அனுபசாலி-திறமைசாலி-சர்வதேச தொடர்புடையவர் என்ற மாயைக்குள் மக்கள் சிக்கி ஏமாந்துபோனார்கள்.

அவரது சர்வதேச தொடர்பால் எதுவும் நடக்கவில்லை.ஒரு உதவியும் கிடைக்கவில்லை.கோத்தாவை விட்டிருந்தால் என்ன நடந்திருக்குமோ அதுதான் இப்போது நடக்கிறது.

மிகவும் சூட்சுமமான முறையில் தங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக ரணிலை ஜனாதிபதியாக்கி வெற்றிகண்டுள்ளது இந்த அரசு.மக்களின் போராட்டம் வீணாகவே போயுள்ளது.

ராஜபக்ஸ குடும்பத்தைப் பாதுகாக்க வந்தவர் எப்படி மக்களை பாதுகாப்பார்? எப்படி மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பார்?

மீண்டும் தான் எப்படி ஜனாதிபதியாக முடியும் என்பதுபற்றித்தான் ரணில் சிந்திக்கிறாரே தவிர எப்படி மக்களின் பிரச்சினைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைப்பது என்பதுபற்றி சிந்திப்பதாக இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்துவிட்டு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதுபற்றித்தான் ரணில் யோசிக்கிறார்.13 ஆவது திருத்தச் சட்டத்தை-அதிகாரப்பகிர்வை வழங்கப்போவதாகக் கூறிக்கொண்டு அதனூடாக வடக்கு-கிழக்கு தமிழர்களின் வாக்குகளை அபகரித்து ஜனாதிபதியாகும் திட்டத்தில்தான் ரணில் உள்ளார்.

அவர் மக்களின் தீர்வாக நம்பி இருப்பது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை மட்டும்தான்.அதுவரைக்கும் மக்கள் இப்படித்தான் துன்பப்படப்போகிறார்கள். அது கிடைத்தாலும்கூட பெரிய மாற்றம் ஒன்றும் நிகழ்ந்துவி டாது என்பதுதான் உண்மை. கோத்தா இருக்கும்போது இருந்த நிலைமையைவிட நிலைமை இப்போது மோசமாகவே உள்ளது.அவர் பதவியை விட்டு ஓடும்போது இருந்த பொருட்களின் விலைகள் அல்ல இப்போது இருப்பது.பல மடங்குகள் அதிகரித்துவிட்டன.

தற்போதைய மின்கட்டண அதிகரிப்பால் மக்கள் மேலும் சிக்கலுக்குள் வீழ்ந்திருக்கின்றனர். மின்கட்டணத்தை செலுத்துவதற்காக தனியாக உழைக்க வேண்டிய கட்டத்தில் மக்கள் இருக்கின்றனர்.

மின்கட்டணமும் அதிகரித்து-அந்த அதிகரிப்பால் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கின்றபோது மக்களின் நிலைமை மிக மிக மோசமாக மாறும்.மக்கள் மீண்டும் ஒரு போராட்டத்துக்குச் செல்வதற்கு இந்த நிலைமை உந்து சக்தியாக மாறும் என்றே தெரிகிறது.

## நாமல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இப்போதுவரை கட்சி ஒன்றின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் கட்டுப்பணம் 50 ஆயிரம் ரூபாவாகவும் சுயேச்சை வேட்பாளரின் கட்டுப்பணத்தொகை 75ஆயிரம் ரூபாவாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பட்ஜெட்டுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரிக்கு ஒரு வாகனம் மட்டுமே வழங்கப்படும்.1600உஉ வாகனம் மட்டுமே வழங்கப்படும்.எரிபொருளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படும்.

பொலிஸ் ,இராணுவம்.நீதிமன்றம் போன்றவற்றின் வாகன பாவனைக்கான எரிபொருளும் மட்டுப்படுத்தப்படும்.

வாகன பாவனை தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அனைத்து சுற்றறிக்கைகளும் ரத்துச் செய்யப்பட்டு ஒரேயொரு சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

## பட்ஜெட்டுக்கு...


(முன்பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் அரசியல் கட்சிகள் தயாராகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென் இலங்கை கட்சிகளுடன் கூட்டணி வைக்காது தனித்து தமிழ் வேட்பாளரை நிறுத்தி தமிழ் மக்களின் பலத்தைக் காட்டுவதே இதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் சஜித் பிரேமதாசா, மைத்திரிபால சிறிசேன மற்றும் சரத் பொன்சேகா போன்றவர்களை ஆதரித்து வடக்கு-கிழக்குத் தமிழர்கள் எந்தவொரு நன்மையையும் அடையாத காரணத்தாலேயே இந்த முடிவை எடுத்திருப்பதாக வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் வட்டாரம் தெரிவிக்கிறது.

இந்த முடிவு வடக்கு - தெற்கிடையே நீண்டதொரு விரிசாலை ஏற்படுத்திவிடும் என்று அஞ்சப்படுகிறது.

இன்ஷா அல்லாஹ்
புனித உம்றா
NOVEMBER - 2023
R.AAKHIR / J.AWWAL - 1445

வெளிநாடுகளில் தொழில் புரிவோரும் எம்மோடு இணைந்து பயணிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும்

மாஷா அல்லாஹ்
- இன்ஷா அல்லாஹ் இரண்டு ஹரம்களிலும் ஜும்ஆக்கள்.
- இரண்டு ஹரம்களுக்கும் மிக அண்மையில் தங்குமிடம்.
  - மக்கா Taj-Al-Raaqi (3 Star Hotel)
  - மதீனா Amjad-Al-Gharra (3 Star Hotel)
- தாயிப், ஆயிஷா மஸ்ஜித் பயணங்கள் உட்பட மக்கா, மதீனா ஸியரத் etc.
- சிறப்பான உணவு பானங்கள்.
- உலமாக்களின் பூரண வழிகாட்டலுடன் மேலும் பல சேவைகள்.

SPECIAL PACKAGE
375,000/-
10 DAYS
QATAR AIRWAYS

எமது உம்றா குழு இன்ஷா அல்லாஹ்
புறப்படுதல்
08.11.2023 Mid-Night
09th Early Morning
COL - JED
திரும்புதல்
18.11.2023 - 4.30 PM
MAD - COL

முன்னாள் ஆசிரிய ஆலோசகர், கொழும்பு பெரியபள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.ஏ.எம். இப்ழால் (பாரி) B.A.(Hons) அவர்களின் தலைமையில் இன்ஷா அல்லாஹ் செல்ல இருக்கும் இந்த யாத்திரையில் இணைந்து பதிவு செய்துகொள்ள உடன் அழையுங்கள்:

IFLAL MOULAVI : 077 731 0845(SL) /00 966 54 804 4113(KSA)
SHIFRI HAJ : 077 755 6200
AL HAJ S. SHAHABDEEN (JP) : 077 311 8778
CHAIRMAN / MANAGING DIRECTOR

IATA Accredited Agent
Air Line Ticketing, Haj & Umra Operators
SKY WORLD TRAVELS (PVT)LTD
F-21, People's Park Complex, Col-12 Tel: 011 2395365







# இஸ்ரேல்-ஹமாஸ் மோதல்: வெல்லப்போவது யார்?



இஸ்ரேல் -பலஸ்தீன் போர் என்பது ஒரு சாதாரண போர் அல்ல. அது இஸ்லாமிய நம்பிக்கையுடன் தொடர்புபட்டது. உலக அழிவின் அடையாளங்களுடன் தொடர்புபட்டது.

பலஸ்தீன் தொடர்பில் முஹம்மது நபி ஜ ஸல் ஸ அவர்கள் என்னவெல்லாம் கூறியுள்ளார்களோ-என்னென்ன எதிர்வு கூறல்களை தெரிவித்துள்ளார்களோ அத்தனையும் நடந்தே தீரும்.

அவர்கள் அறிவித்த உலக அழிவு அடையாளங்கள் அத்தனையும் நடந்துகொண்டே வருகின்றன.ஹிஜாஸ ில் நெருப்பு போன்ற பல அடையாளங்கள் நடந்து முடிந்துவிட்டன.இன்னும் பெரும் பெரும் அடையாளங்கள் நிகழவுள்ளன.

அவற்றுள் முக்கியமானதுதான் பலஸ்தீனத்துடன் தொடர்புபட்ட அடையாளங்கள்.

இமாம் மஹ்தியின் ஆட்சி,தஜ்ஜாலின் வருகை,ஈஸா நபி அவர்களின் வருகை, தஜ்ஜாலின் கொலை,அல்-அக்ஸா பள்ளிவாசல் மீட்பு என்று பல அடையாளங்கள் இடம்பெறும்.

இப்போது பலஸ்தீன மக்கள் யூதர்களிடம் இருந்து மீட்பதற்காகப் போராடி வருகின்ற அல்-அக்ஸாவை ஈஸா நபி அவர்களே மீட்பார்கள்.

இந்த அடையாளங்கள் எல்லாம் எப்போது இடம்பெறும் என்று சொல்ல முடியாது.ஆனால்,நடந்தே தீரும்.அதுதான் இஸ்லாமிய நம்பிக்கை.

இந்த அடையாளங்கள் நிகழும்வரை இஸ்ரேல்-பலஸ்தீன போர் நடந்துகொண்டேதான் இருக்கும். ஆனால்,ஒருபோதும் இஸ்ரேலால் பலஸ்தீனை வெற்றிகொள்ளவே முடியாது.ஈஸா நபி அவர்கள் வரும்வரை சண்டை தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

இப்போது இடம்பெறும் சண்டை மூன்றாவது உலகப் போராக மாறலாம் அல்லது அதைவிட பெரும் சண்டையாக மாறலாம்.

எப்படிப்பட்ட பயங்கரமான சண்டையாக இருந்தாலும்,அது யூதர்களுக்கு வெற்றியைக் கொடுக்காது.அவர்களால் பாலஸ்தீனத்தை பிடிக்கவே முடியாது.

விமானங்கள் மூலம் குண்டுகளை போட்டு காஸாவை முற்றாக அழித்துவிடலாம் என்று நினைக்கிறது இஸ்ரேல்.

அவர்கள் அந்தக் கட்டடங்களை வேண்டுமானால் அழிக்கலாம்.பலஸ்தீனை அழிக்கவே முடியாது.

காஸாவுக்குள் தரைவழியாக நுழைவதற்கு அஞ்சுகிறது இஸ்ரேல்.இந்தச் சண்டை தொடங்கியதில் இருந்து இஸ்ரேலிய படையினர் காஸாவின் எல்லையிலேயே நிற்கின்றனர்.உள்ளே நுழையவில்லை.

இருந்த இடத்தில் இருந்துகொண்டு பட்டனை தட்டிவிட்டு எதிரியை அழிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் இந்த யூதர்கள்.

நேருக்கு நேரே சண்டை செய்யும் தைரியம் அவர்களுக்கு இல்லை.அப்படி தைரியம் இல்லாத யூதர்களால் எப்படி பலஸ்தீனத்தை கைப்பற்ற முடியும்? ஹமாஸை அழிக்க முடியும்?

தரை வழியால் செல்லாமல் ஹமாஸை அழிக்க முடியாது.தரை வழியால் சென்றால் யூதர்களால் தப்ப முடியாது.

ஹமாஸ் அழிவதை விடவும் யூதர்கள் தப்புவதே யூதர்களின் தேவை.

தரை வழி பயங்கரமானது.ஹமாஸின் பயந்தரமான-பலமான சுரங்க பாதைகள் அங்கு அதிகம் உள்ளன.அதற்குள் இஸ்ரேலிய கனரக வாகனங்கள் சிக்கிவிடும்.

பிறகும் அந்த வாகனங்களையும் மீட்க முடியாது.இஸ்ரேலிய படையினரையும் மீட்க முடியாது.

சுரங்கங்களுக்கு அப்பால் கன்னி வெடிகள் அதிகம் அங்கு புதைக்கப்பட்டுள்ளன.அதில் சிக்கி ஒரு இஸ்ரேலிய இராணுவத்தின் கால் பறந்தாலே போதும்.ஏனைய இராணுவத்தின் உள தைரியம் சிதைந்துவிடும். கண்ணீர் விட்டு அழுதுவிடுவார்கள். காயப்பட்டவர்களை அப்படியே போட்டுவிட்டு பின்வாங்கிவிடுவார்கள்.

உலகத்தின் எந்தவோர் இராணுவத்திடமும் இல்லாத பழக்கம்தான் இஸ்ரேலிய இராணுவத்திடம் இருக்கும் கண்ணீர் விட்டு அழும் பழக்கம்.

இந்த மனநிலையோடு எப்படி சண்டை செய்ய முடியும்.?

கைகளில் பலமான துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு பலஸ்தீன சிறுவர்களின் கல் வீச்சுக்களுக்கு அஞ்சி ஓடுபவர்கள் இஸ்ரேலிய படையினர். இவர்களா தரை வழியாக காஸாவுக்குள் நுழைந்து ஹமாஸை அழிக்கப் போகிறார்கள்?

ஹமாஸின் மனவலிமைக்கு முன் இவர்கள் வெறும் தூசு. மேலும் காஸாமீதான போரை நிறுத்தாவிட்டால் இஸ்ரேலுக்கு எதிராக துருக்கியும் ஈரானும் களமிறங்கப் போவதாக அறிவித்துள்ளன.

அரபுலகில் இந்த இரண்டு நாடுகளும் பலமிக்க நாடுகள்.இந்த நாடுகள் களமிறங்கினால் இவர்களுடன் சேர்ந்து ரஸ்யா உள்ளிட்ட இஸ்ரேல் எதிர்ப்பு நாடுகளும் களமிறங்கும்.அப்போது இஸ்ரேல் பெரும் அழிவைச் சந்திக்கும்.

தாம் சந்தோசமாக வாழ வேண்டும் என்பதற்காகவே இஸ்ரேலை உருவாக்கி வைத்துள்ளார்கள் யூதர்கள். அப்படிப்பட்டவர்கள் அந்த அழிவை விரும்பமாட்டார்கள்.

ஆனால்,பலஸ்தீன மக்களுக்கு அழிவு என்பது பழகிப்போன ஒன்று.

இதனால் பலஸ்தீனை வெற்றிகொள்ள முடியாத இந்தப் போர் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.ஈஸா நபியின் வருகை வரை பலஸ்தீன மக்களும் விடாமல் போராடிக்கொண்டே இருப்பார்கள்.

உலக முடிவுக்கான படுபயங்கரமான போர் எல்லாம் இந்தப் பகுதியில்தான் இடம்பெறும்.அவர்களால் பலஸ்தீனை மாத்திரமல்ல எந்தவொரு முஸ்லிம் நாட்டையும் இவர்களால் முழுமையாகப் பிடிக்க முடியாது.

ஆகவே,இஸ்ரேல் தனக்கு ஏற்படப்போகும் அழிவில் இருந்து தப்ப வேண்டுமென்றால் உடனடியாக போரை நிறுத்தியே ஆக வேண்டும்.

***

**கைகளில் பலமான துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு பலஸ்தீன சிறுவர்களின் கல் வீச்சுக்களுக்கு அஞ்சி ஓடுபவர்கள் இஸ்ரேலிய படையினர். இவர்களா தரை வழியாக காஸாவுக்குள் நுழைந்து ஹமாஸை அழிக்கப் போகிறார்கள்?**





# தாயைக் கவனிப்பதில்லையாம்



சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி நாடாளுமன்றம் சென்றபோது மொட்டு கட்சி எம்பிக்கள் வழமைபோல் அவரைச் சுற்றி வளைத்து உரையாடத் தொடங்கினர்.

அங்கு எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவையே கழுவி ஊற்றினர்.

வெள்ளைத் தோலைக் கண்டதும் சிலர் அஞ்சுகிறார்கள் என்றார் மதுர விதானகே எம்பி

அப்பா குண்டு வெடிப்பில் மரணித்ததும் அம்மாவை ஜனாதிபதியாக்க முடியுமா என்று கேட்டவர்தான் இப்போதைய எதிர்கட்சித் தலைவர்.

தாயைக் கவனிப்பதில்லை. நுளம்புத் திரிகூட ஜனாதிபதி செயலகத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் அந்தத் தாய்.

ஆனால்,மகன் நாடு பூராகவும் சென்று எல்லோருக்கும் லஞ்சம் கொடுத்து வாக்குச் சேகரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார் என்று கூறினார் இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத்.




# ஆட்சியைப் பிடிக்க பசிலின் யோசனை

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமேரிக்கா செல்வதற்கு முன் அவரை பசில் ராஜபக்ஸ போய்ச் சந்தித்தார் அல்லவா.

அப்போது பசில் ஒரு முக்கியமான விடயம் பற்றி ஜனாதிபதியுடன் பேசினாராம்.

அதுதான் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சி தேர்தலில் பெறப்போகும் அடைவு பற்றியது.

மொட்டு கட்சி திறமையான வேட்பாளர் ஒருவரை நிறுத்தினாலும் சரி,ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டாலும் சரி தோல்வி நிச்சயம் என்பதுதான் அந்த விடயம்.

பசில் ரணிலை சந்தித்தது பசில் தரப்பால் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு அறிக்கையுடன்.அந்த அறிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவாலும் வெல்ல முடியாது. மொட்டு கட்சி நிறுத்தும் ஏனைய வேட்பாளராலும் வெல்ல முடியாது.



இதனால் ஆட்சியைப் பிடிக்க ஒரு புது யோசனை ஒன்றை ரணிலுக்கு பசில் வழங்கினார். அதுதான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்துவிட்டு நாடாளுமன்ற ஆட்சி முறைமையைக் கொண்டு வருதல்.

அப்படிச் செய்தால் நாடாளுமன்றத் தேர்தலில் மொட்டு தோல்வியடைந்தாலும் மொட்டும் ஐக்கிய தேசிய கட்சியும் சேர்ந்து ஏனைய கட்சிகளில் இருந்து ஆட்களை வளைத்துப் போட்டு ஆட்சியை அமைக்கலாம் என்ற யோசனை ஒன்றை பசில் ஜனாதிபதிக்கு வழங்கினார்.

# கோபத்துக்கு இதுதான் காரணமாம்



மஹிந்த ராஜபக் ஸ எப்போதுமே மேற்குல எதிரியாகவே பார்க்கப்படுகிறார்.ஆனால்,ரணில் விக்ரமசிங்க மேற்குல நண்பனாகப் பார்க்கப்படுகிறார்.

ஆனால்,அவர் சில நாட்களுக்கு முன் ஜெர்மன் ஊடகவியலாளருடன் நடந்துகொண்ட விதம் மேற்குலகை முகம் சுழிக்க வைத்தது.

மேற்குல நண்பனான ரணில் அந்த மேற்குலகின் ஊடகவியலாளருடன் ஏன் இவ்வாறு நடந்துகொண்டார் என்று தேடிப் பார்த்தால் அதற்கு இரண்டு விடயங்கள் காரணம் என்று அறிய முடிகிறது.

அதில் ஒன்று பொருளாதார அபிவிருத்திக்காக மேற்கு நாடுகளிடம் இருந்து போதுமான உதவி கிடைக்காமை.அதனால் ஆத்திரமடைந்ததால் அந்த ஆத்திரத்தை அந்த ஊடகவியலாளரிடம் காட்டி இருக்கிறார்.

இரண்டாவது காரணம் ராஜபக்ஸ குடும்பத்தை-மொட்டு கட்சியை பாதுகாக்கக்கூடிய ஒருவர் ரணில்தான் என்று காட்டி அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சியின் வேட்பாளராக அவரையே போட வைப்பதற்கான வியூகமாம்.

எப்புடி வேல...!!!

# இரண்டாக மாறிய 40



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை எப்படியாவது ஜனாதிபதியாக்க வேண்டும் என்பதற்காக நிமால் லான்சா தலைமையில் கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

அதிலும் மொட்டு கட்சியில் இருந்து பலரை உடைத்து எடுப்பதற்காக அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள்.

மொட்டு கட்சி எம்பிக்கள் 40 பேரை இந்தக் கூட்டணியில் இணைப்பேன் என்று கூறிக்கொண்டு திரிகிறார் லான்சா.

அந்த 40 இரண்டாகக் குறைந்துள்ளதுதான் பரிதாபம்.

சில நாட்களுக்கு முன் குருநாகலில் உள்ள அனுர பிரியதர்சனவின் வீட்டில் இந்தக் கூட்டணியின் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட அந்த மொட்டு கட்சி எம்பிக்கள் 40 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால்,வந்ததோ 2 பேர் மட்டும்தான்.

ஒருவர் நிமல் லான்சா .அடுத்தவர் வர்த்தக அமைச்சர் நலின் பெர்னாண்டோ.

அது மாத்திரமன்றி அழைக்கப்பட்ட மொட்டு கட்சியின் தொகுதி அமைப்பாளர்களின் வருகையும் குறைவாகவே இருந்ததாம்.

""அந்தோ பரிதாபம்...""!!!

# அமைச்சுப் பதவியில் மண்



சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் அமைச்சுப் பதவியைப் பறித்து அனுரபிரியதர்சன யாப்பாவுக்கு வழங்குவதற்குத் தயாரானார் ஜனாதிபதி.

இந்த முடிவை அவர் யாப்பாவுக்கு அனுப்பி வைத்ததும் அவரும் விருப்பதைத் தெரிவித்து பதவியை பாரமேற்பதற்குத் தயாரானார்.

இந்தத் தகவல் மொட்டு கட்சிக்குக் கிடைத்ததும் ஜனாதிபதிக்கு அவசர செய்தி ஒன்றை அவர்கள் அனுப்பி வைத்தனர்.

மொட்டு கட்சியைத் தவிர வேறு எவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கினால் இதற்கு எதிராக கட்சியால் கடும் நடவடிக்கை எடுப்போம் என்பதுதான் அந்த செய்தி.

திட்டத்தை அப்படியே நிறுத்திவிட்டார் ஜனாதிபதி.

"" அந்த பயமிருக்கட்டும் ஆமா...""

# சபாநாயகரை குளிர்வித்த ஜனாதிபதி



சில நாட்களுக்கு முன் இரத்தினபுரி சீவலி மத்திய மஹாவித்தியாலயத்தின் மாணவர் நாடாளுமன்றத்தின் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி செயலக மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

அதில் பல எம்பிக்கள் கலந்துகொண்டனர். சபாநாயகர் மஹிந்த யாப்பாவும் ஒருவர்.

அன்றைய தினம் மஹிந்த யாப்பாவின் பிறந்த தினம்.அவருக்குத் தெரியாமலேயே அவருக்கு அதிர்ச்சி கொடுக்க எண்ணினார் ஜனாதிபதி.

அவரது செயலாளரிடம் கூறி கேக் ஒன்றை வாங்கிக்கொண்டார் ஜனாதிபதி.

சபாநாயகர் நிகழ்வு நடக்கும் அறைக்குள் செல்வதற்குத் தயாரானபோது ஒரு முக்கிய செய்தி இருப்பதாகக் கூறி அவரை ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க.

உள்ளே போய்ப் பார்த்ததும் புல்லரித்துப் போனார் சபாநாயகர்.

அவரது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாட்டோடு இருந்தார் ஜனாதிபதி.கூடவே எம்பிக்களும்.

# நம்பிக்கையூட்டிய ஜனாதிபதி





நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி சென்றபோது அங்கு அமைச்சர்கள் மனுஷ நாணயக்கார மற்றும் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோரைச் சந்தித்தார் ஜனாதிபதி.

ஜனாதிபதியைக் கண்டதும் "" சேர்..எங்கட எம்பி பதவியும் அமைச்சுப் பதவியும் போகப்போகுது எண்டு சொல்றாங்க."" என்றார்கள் இருவரும்.

"அத நம்பாதீங்க.முதல்ல நசீர் அஹமட்டுக்கு நீதிமன்றம் கொடுத்த தீர்ப்ப வாசிச்சு பாருங்க.நசீர் அவருக்கு எதிரான கட்சியின் குற்றப் பத்திரிகைக்கு பதில் வழங்கல்ல.அக்குற்றச்சாட்டு பொய் எண்டு அவர் பதில் கொடுக்கணும். அத அவர் செய்யல்ல" என்றார் ஜனாதிபதி.

# உத்தம தலதா செயற்றிட்டம்



"தேசத்தை வளப்படுத்துவோம்" என்பதற்கு அமைவாக செயற்படும் ளுநசநனெடை குடழரச ஆடைடடள முதியோருக்கு மகிழ்ச்சியை அளிக்கும் "உத்தம தலதா" செயற்திட்டத்தை இரண்டாவது வருடமாகவும் முன்னெடுத்தது.

ளுநசநனெடை ஆனது மாவனெல்லை, குருணாகல் மற்றும் கம்பளையைச் சேர்ந்த முதியோர் இல்லங்களில் இருந்து 100 க்கு மேற்பட்ட முதியோர்களுக்கு தலதா மாளிகைக்கு விஜயம் செய்து பிரார்த்தனையை மேற்கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் மறக்க முடியாத பயணம் ஒன்றை ஒழுங்கமைத்திருந்தது.

அத்தோடு இந்த சிறப்பு அதிதிகள் எசல பெரஹறாவின் அழகினை விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்த பகுதியில் இருந்து பார்வையிட முடிந்ததோடு, அங்கு அவர்களுக்கு விசேட சௌகரியமான முன்வரிசை இருக்கை ஒழுங்கமைப்புகள், அத்துடன் உணவு மற்றும் சிற்றுண்டிகள் என்பனவும் வழங்கப்பட்டு அத்தருணத்தை மேலும் மகிழ்ச்சியாக்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

உத்தம தலதா செயற்திட்டத்தின் ஊடாக ளுநசநனெடை குடழரச ஆடைடடள சமூகத்திற்கு, விசேடமாக வயது முதிர்ந்த மற்றும் ஆதரவற்றோருக்கு மரபினைத் தொடர்வதற்கும், அன்பை வெளிப்படுத்துவதற்கும், அடுத்த தலைமுறையுடன் ஒன்றிணைப்பதற்கும் உதவுகிறது.

# ALFT இற்கு தங்க விருது



இலங்கையின் ஒரேயொரு பிரத்தியேகமாக அமைக்கப்படும் பொதியமைப்புத் தீர்வுகள் வழங்குனரான ALFT பக்கேஜிங் இற்கு அண்மையில் பாங்கொக், தாய்லாந்தில் நடைபெற்ற மதிப்புமிக்க ஆசிய பொதியமைப்பு விசேடத்துவ விருதுகள் 2023 இல் 'Wide Web Flexo' பிரிவில் தங்க விருதை வெற்றிகொண்டது.

குறிப்பாக, இந்த நிகழ்வில் விருதொன்றைப் பெற்றுக்கொண்ட ஒரேயொரு இலங்கை நிறுவனம் யுடுகுவு பக்கேஜிங் மட்டுமே.

வருடாந்த ஆசிய பொதியமைப்பு விசேடத்துவ விருதுகள் நிகழ்வானது விசேடத்துவம், புத்தாக்கம், மற்றும் நிலைபேறு என்பவற்றுக்கு ஒரு சான்றாக அமைந்து ஆசிய பிராந்தியம் முழுவதும் சிறந்த பொதியமைப்பு வழங்குனர்களுக்கு அங்கீகாரத்தையும் கௌரவத்தையும் பெற்றுத்தருகின்றது.

இம்முறை 20 ஆவது வருடமாக இந்நிகழ்வு நடைபெறுவதோடு, முதற்தர நடுவர் குழாமின் ஒத்துழைப்போடு இவ்வகையில் ஆசியாவில் நடைபெறும் ஒரேயொரு பிராந்திய போட்டி இது மட்டுமே.

இத்துறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி மதிப்பினைப் பெற்றுள்ள யுடுகுவு பக்கேஜிங், மாறிவரும் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் தீர்வுகளை உலகளாவிய தராதரங்களின் கீழ் உள்நாட்டு விசேடத்துவத்துடன் வழங்கியவாறு தொடர்ந்தும் தனது சேவையின் நிலையை உயர்த்திக் கொண்டுள்ளது.

தங்க விருதானது நிறுவனத்தின் புத்தாக்கமான வடிவமைப்பு, மற்றும் வாடிக்கையாளரின் தேவையை சிறப்பாக புரிந்துகொண்டு அதியுயர் தரத்திலான பொதியமைப்பை பெற்றுத்தந்தமையை கௌரவிக்கிறது.

# சமூக பொருளாதார அபிவிருத்திக்காக JICA-HNB இணைவு



இலங்கையின் நிலையான சமூக–பொருளாதார அபிவிருத்திக்காக, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB உடன் கைகோர்த்துள்ளது.

இந்த கூட்டாண்மை மூலம், JICA, ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவித் திட்டம் (ODA) செயல்படுத்தும் முகவர், உடீ இன் பரந்த அளவிலான நிபுணத்துவம் மற்றும் அதன் விரிவான கிளை மற்றும் வாடிக்கையாளர் வலையமைப்பைப் பயன்படுத்தி, அதன் விரிவான அனுபவத்தை நீண்ட கால மேம்பாட்டு பங்காளியாக மேம்படுத்துகிறது.

நிதிப் பொறுப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலையான நடைமுறைகளை வளர்க்கும் முன்முயற்சிகள் மூலம் அவர்கள் சமூக சவால்களை எதிர்கொள்வார்கள்.

விவசாயம், பால் உற்பத்தி, விநியோகச் சங்கிலி நிதியுதவி, பெண்களுக்கு சுயதொழில் ஆரம்பிக்க உதவுதல், மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் போன்ற துறைகளில் கவனம் செலுத்துவதை இந்தக் கூட்டாண்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# ALஇல் உச்சப் பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கு மடிகணினிகள்



2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த உயர் தரப் பரீட்சையில், அனைத்து பாட பிரிவுகளிலும் உச்ச ஸ்தானங்களைப் பெற்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மக்கள் வங்கி புத்தம் புதிய மடிகணினிகளை வழங்கியது

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரிஃபொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோரின் தலைமையில் கொழும்பு 05 இல் உள்ள மக்கள் வங்கி பணியாளர்கள் பயிற்சிக் கல்லூரியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

மக்கள் வங்கியானது தத்தமது துறைகளில் சிறந்து விளங்கிய பின்வரும் மாணவர்களை அங்கீகரித்து, கௌரவித்துள்ளது: உயிரியலில் முதலாம் இடத்தைப் பெற்ற மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரமுதி பாஷ ினி முனசிங்க. பௌதீக விஞ்ஞான பிரிவில் முதலிடத்தைப் பெற்றுள்ள கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த மனேத் பானுலா, வர்த்தகப் பிரிவிற்கு கொழும்பு, சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த தில்சரணி தருஷிகா, கலைப் பிரிவில் அகில இலங்கையில் முதலிடம் பெற்ற கேகாலை புனித சூசையப்பர் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சசினி சத்சரணி அதிபத்து, பொறியியல் தொழிநுட்ப பிரிவில் உச்ச ஸ்தானத்தைப் பெற்ற காலி ரிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்த சமுதித நயனப்ரிய மற்றும் உயிர்முறைமைகள் தொழினுட்பவியலில் நாட்டில் முதல் இடத்தைப் பெற்ற கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ருச்சினி அஹின்சா விக்ரமரத்ன.

# HNB Singithi Giftober சேமிப்பு மாதம் ஆரம்பம்





இலங்கையில் மிகவும் வாடிக்கையாளர் நட்பு வங்கியான HNB PLC, சிறுவர் தினத்தைக் கொண்டாடும் விதமாக அதன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த பிரச்சார மேம்பாட்டு நடவடிக்கையான Singithi Giftober-ஐ மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

சிறுவர் கணக்கு வைத்திருப்பவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் பல்வேறு பரிசுகளுடன், 47 நாட்கள் நடைபெறும் வருடாந்த பிரச்சாரம் ஒக்டோபர் மாதம் 02ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 17ஆம் திகதி வரை நடைபெறும்.

வழக்கப்படி, HNBஇன் 33 வாடிக்கையாளர் நிலையங்களில் 3,000க்கும் அதிகமான சிறுவர் சிறுமிகளை அழைத்துள்ளது.

அவர்களுக்காக உற்சாகமான விளையாட்டுகள் மற்றும் அவர்களை மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, எதிர்கால சந்ததியினருக்கு மதிப்புமிக்க திறன்கள் மற்றும் சேமிப்பு பழக்கங்களை வழங்குவதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"உடேஇல் ஒக்டோபர் எங்களுக்கு ஒரு சிறப்பு மாதமாகும், ஏனெனில் இது எங்கள் வருங்கால செல்வங்களான எங்கள் குழந்தைகளை கொண்டாடும் மாதமாகும். நாளைய தலைவர்களுக்கு இன்றே மகிழ்ச்சியைக் கொண்டு வருவதை உறுதி செய்வதற்காக நாங்கள் எமது பயணத்தை முன்னெடுத்துச் செல்கிறோம்." என்று HNB இன் வைப்புப் பிரிவின் பிரதானி விரங்க கமகே கூறினார்.

# சமூக மருத்துவர்கள் கல்லூரி மற்றும் பேபி செரமி இணைவு




குழந்தைகளுக்கு ஏற்படும் காயங்களை தடுக்க முடியுமாக இருந்த போதிலும், இலங்கையில் ஒவ்வொரு 4 மணி நேரத்திற்கும் ஒரு குழந்தை காயம் காரணமாக மரணிப்பதோடு, தடுக்கக்கூடிய விபத்துக்கள் காரணமாக ஒவ்வொரு வாரமும் 50 குழந்தைகள் வீதமும், மாதத்திற்கு 215 குழந்தைகளும் இவ்வாறு மரணிக்கின்றனர்.

தொடரான புத்தாக்கமான செயற்பாடுகள் மூலம் சிறுவர்களிடையே ஏற்படும் விபத்துகளை தடுக்கக்கூடிய விதத்தை, இலங்கை சமூக மருத்துவர்கள் கல்லூரி (College of Community Physicians) மற்றும் பேபி செரமி (Baby Cheramy) இணைந்து மேற்கோண்டுள்ளன.

இந்த கூட்டாண்மையானது, அதிகரித்து வரும் விபத்துகளை குறைக்கும் முயற்சியின் அடிப்படையில், குழந்தைகளுக்கு சூழலில் ஒழிந்துள்ள ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

இலங்கையின் சமூக மருத்துவர்களின் கல்லூரியானது, சமூக மருத்துவத் துறையில் உள்ள நிபுணத்துவம் வாய்ந்த பிரதான அமைப்பாகும் என்பதோடு, உயர்தர பராமரிப்பு மற்றும் பொதுச் சுகாதார செயற்பாடுகளை ஊக்குவித்தல் மூலம் இலங்கை மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக அது பணியாற்றி வருகிறது.

அதே சமயம் இலங்கையில் முன்னணி வகிக்கின்ற, அனைவராலும் மிகவும் விரும்பப்படும் குழந்தை பராமரிப்பு வர்த்தக நாமமான பேபி செரமியானது, குழந்தைகளுக்கான பாதுகாப்பான உலகத்தை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்ட 60 வருடங்களுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.



# புதுப் பயணத்தில் RE/MAX Sri Lanka

இலங்கையில் ஆதனத் துறையில் (ரியல் எஸ்டேட்) மிகவும் ஆர்வமூட்டுகின்ற ஒரு செய்தியாக, RE/MAX Sri Lanka நிறுவனம் தற்போது புதிய தலைமைத்துவத்தின் கீழ் புத்தாக்கம் மற்றும் மகத்துவத்தை நோக்கிய பயணத்தில் காலடியெடுத்து வைக்கவுள்ளது.

அந்த வகையில் கொழும்பிலுள்ள சினமன் கிரான்ட் ஹோட்டலில் வெகு விமரிசையாக இடம்பெற்ற RE/MAX Sri Lanka 2.0 என்ற தனித்துவமான நிகழ்வில் புதுப்பிக்கப்பட்ட குறிக்கோள் மற்றும் ஆற்றலுடன் முன்னோக்கிப் பயணிக்கவுள்ளதை RE/MAX Sri Lanka நிறுவனம் அறிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டில் இலங்கையில் முதல்முறையாக செயல்பட ஆரம்பித்த RE/MAX Sri Lanka நிறுவனம், நான்கு முக்கியமான இடங்களில் தனது அலுவலகங்களை அமைத்து, நாட்டில் வீடு மற்றும் காணிகளை வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது.

ரஜீவ் கோணேஸ்வரன், ஷ சீவன் கணேசானந்தன் மற்றும் சஜீவ் எட்வேர்ட் ஆகியோரின் புதிய தலைமைத்துவத்தின் கீழ் தற்போது இக்கிளை நிறுவனம் இது வரை கண்டிராத வளர்ச்சி மற்றும் வெற்றியை நோக்கிப் பயணிக்கத் தயாராகியுள்ளது.

முகவர்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தல், வாடிக்கையாளர்களின் திருப்தி மட்டத்தை உறுதி செய்தல் மற்றும் சந்தையில் தனது இருப்பினை அதிகரிக்கும் வகையில் வணிக செயல்பாடுகளை விஸ்தரித்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட இலக்குடன் இந்நிறுவனம் செயல்படவுள்ளது.

1973 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட RE/MAX நிறுவனம், உலகளாவில் ஒரு முன்னணி ஆதன நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்றது.

# DIGIECON 2030 மாநாடு



சர்வதேச இயக்க தளமான Uber, 2024 ஆம் ஆண்டில் பிரத்தியேகமான அறிவுப் பகிர்வு மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்காக இலங்கையிலிருந்து 3 தொடக்க வணிக முயற்சிகளை இந்தியாவிலுள்ள தனது தொழில்நுட்ப மையத்திற்கு அழைக்கவுள்ளது.

இலங்கையின் முக்கியமான முதலீட்டு உச்சி மாநாடான DIGIECON 2030 நிகழ்வில் நிறுவனம் பங்குபற்றுவதுடன், இந்நிகழ்வானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) கூட்டாண்மையுடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக, Uber இன் தொழில்நுட்ப பொறியியலுக்கான பணிப்பாளரான ஹறி ஸ்ரீனிவாசன் அவர்கள் இதற்காகக் கிடைக்கப்பெற்ற 100 இற்கும் மேற்பட்ட நுழைவு விண்ணப்பங்களிலிருந்து அடுத்த கட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 26 தொடக்க வணிக முயற்சிகளைக் கொண்ட குழுவைச் சந்தித்து, தொடக்க வணிக முயற்சிகளை எவ்வாறு வளர்த்துக் கொள்வது என்பது தொடர்பான ஆழமான நுண்ணறிவுகளை பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

இலங்கையில் டிஜிட்டல் மாற்றத்திற்கான வளர்ச்சியை விரைவுபடுத்துவதே DIGIECON 2030 இன் நோக்கம். தொழில்நுட்ப தொடக்க வணிக முயற்சி சார்ந்த போட்டியானது நிகழ்வின் ஒரு அங்கமாக அமைந்துள்ளதுடன், நாடெங்கிலுமிருந்து இளம் தொழில் முயற்சியாளர்கள் தமது சிந்தனைகளை வணிகத்துறை சார்ந்தவர்கள் மற்றும் தொழில் துறை வல்லுனர்கள் மத்தியில் முன்வைத்து, தேவையான முதலீடுகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்கின்றனர்.



# செலான் 'டிக்கிரி சந்தை

நாட்டின் விருப்பத்திற்குரிய சிறுவர் சேமிப்பு வர்த்தக நாமமான செலான் டிக்கிரி, அண்மையில் அரலகன்வில வெலயாய தேசிய பாடசாலையுடன் இணைந்து இளம் சிறுவர்களுக்கு நிதிசார் கல்வியறிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது.

பாடசாலை வளாகம், பாரம்பரிய இலங்கைச் சந்தையின் எண்ணக்கருவில் உதித்த செலான் டிக்கிரி சந்தையால் களை கட்டியது.

செலான் டிக்கிரி சந்தை, மாணவர்களுக்கு நிதி, சேமிப்பு, வாடிக்கையாளர்கள், பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான நடைமுறை அனுபவத்தை பெற்றுக் கொள்ளவும் அதனுடன் இணைந்த சிக்கல்களை புரிந்துகொள்வதற்குமான தளத்தை வழங்கியது.

இந்த முயற்சி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து பாராட்டைப் பெற்றுக்கொண்டதுடன் அவர்கள் அனைவரும் இளைய தலைமுறையினருக்கு மதிப்புமிக்க நிதி அறிவை வழங்க ஆர்வமாக இருந்தனர்.

டிஜிட்டல் கவனச்சிதறல்கள் மற்றும் கல்வித் தேர்ச்சிகளில் ஆதிக்கம் செலுத்தும் உலகில், செலான் டிக்கிரி சந்தை, அனைத்து மாணவர்களதும் வரவேற்பை பெற்றது.

இந்நிகழ்வு பிள்ளைகளுக்கு நடைமுறை நிதிக் கல்வியை வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சிறு வயதிலிருந்தே நிதி முகாமைத்துவம் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டியது.

# எம்பிலிப்பிட்டியவில் சியபத பினான்ஸ்



நிதிச் சேவைகளில் நம்பகமான பெயரான சம்பத் வங்கி பிஎல்சியின் முழு உரிமம் பெற்ற  துணை நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி, இலங்கை மக்களுக்கு இணையற்ற நிதி சேவைகளை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை மேலும் விரிவுபடுத்தி, அண்மையில் எம்பிலிப்பிட்டியவில் தனது மற்றுமொரு கிளையை திறந்தது.

எம்பிலிப்பிட்டிய பல்லேகம பிரதான வீதியில் இல. 74 இல் அமைந்துள்ள புதிய கிளையானது 2023 செப்டெம்பர் 5 ஆம் திகதி பிரதம அதிதிகளான சியபத பினான்ஸ் பிஎல்சியின் தலைவர் திரு. சுமித் குமாரதுங்க அவர்கள், சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர்  திரு. ஆனந்த செனவிரத்ன மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், திரு. சுதத் மாரசிங்க ஆகியோரின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

இக்கிளையானது சியபத பினான்ஸ ின் நாடளாவிய கிளை வலையமைப்பில் இணைத்துக்கொண்ட 45 ஆவது கிளையாகும்.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் உள்ளூர் வர்த்தகம் மற்றும் விவசாயத் துறைகளுக்கு ஆதரவளித்து, பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு தனது பங்கினை ஆற்றி வருகின்றது.

குத்தகை, நிலையான வைப்பு, சேமிப்புக் கணக்குகள், தங்கக் கடன் வசதி, வணிகக் கடன்கள், தனிநபர் கடன்கள், வாடகை கொள்முதல் மற்றும் பிரதிநிதிச் சேவைகள் உள்ளிட்ட விரிவான சேவைகளை உள்ளடக்கி இக் கிளை தனது வாடிக்கையாளர்களுக்கு சேவையை வழங்க உள்ளது.



# Curtin Colombo வழங்கும் வாய்ப்புகள்

Curtin Colombo அண்மையில் ஊரசவலை பல்கலைக்கழகத்தின் பள்ளி, முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவரான பேராசிரியர் ஜுலியா ரிச்சர்ட்சனின் வரவேற்று உபசரித்ததோடு, இது நிறுவகங்களுக்கு இடையிலான பணியாளர்கள் பரிமாற்றத் திட்டத்தின் அவசியமான ஒரு விடயமாக இது அமைந்தது.

ஊரசவலை ஊழுடழஅடிழ  ஆனது, பணியாளர் பரிமாற்றம், அறிவு மற்றும் நிபுணத்துவத்தின் தடையற்ற வழங்கலை உறுதி செய்தல் போன்ற முன்னெடுப்புகள் ஊடாக ஊரசவலை ஊரசவலை யுரளவசயடயை உடன் நிலையானதொரு தொடர்பை பேணுகிறது.

மேலதிகமாக, மாணவர்கள் வெளிநாட்டு விரிவுரையாளர்களிடம் இருந்து கற்கும் தனித்துவமான வாய்ப்பைப் பெறுவதோடு, இது அவர்களின் கல்வி அனுபவத்தை வளப்படுத்தி எண்ணற்ற வாய்ப்புகளுக்கு தயார்படுத்துவதோடு அவர்களுக்கு உலகளாவிய ஒரு அனுகூலத்தையும் பெற்றுத் தருகிறது.

பேராசிரியர் ரிச்சர்ட்சன் தனது வருகையின்போது, கர்டின் பல்கலைக்கழகத்தின்  புதுமையான வணிக நிர்வாக இளமாணி (BBA)) கற்கைநெறியின் அனுகூலங்களைப் பற்றி உரையாற்றினார்.

Curtin Colombo  இனால் வழங்கப்படும் இந்த புரட்சிகரமான டீடீயு கற்கைநெறியானது சர்வதேச வணிகம், டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும், புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சி ஆகிய மூன்று தனித்துவமான சிறப்புத்தேர்ச்சிகளை வழங்குகிறது.

# சிறுவர்களுக்கு அமானா வழங்கும் அதிஷ்டம்




அமானா வங்கி, இலங்கையின் முன்னணி இலத்திரனியல் வணிக சந்தைப்பகுதியான னுயசயண உடன் கைகோர்த்து, வங்கியின் சிறுவர் சேமிப்பு கணக்குதாரர்களுக்கு புத்தாக்கமான அன்பளிப்பு அனுபவத்தை வழங்க முன்வந்துள்ளது.

இளம் சேமிப்பாளர்களுக்கு வெகுமதிகளை வழங்குவதற்காக இலத்திரனியல் வணிக கட்டமைப்பை பயன்படுத்தப்படுவதால் இந்த பங்காண்மை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. சிறுவர் சேமிப்புகளில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்துவதாகவும் இந்த பங்காண்மை அமைந்துள்ளது.

இந்தப் பங்காண்மையினூடாக, தகைமை வாய்ந்த சிறுவர் சேமிப்பு கணக்குதாரர்களுக்கு ஒன்லைன் அன்பளிப்பு வவுச்சர்கள் பரிசாக வழங்கப்படும்.

இவற்றை னுயசயண அப்ளிகேஷனில் அல்லது இணையத்தளத்தில் பயன்படுத்தி கொள்வனவுகளை மேற்கொள்ள முடியும்.  இந்த புதிய வெகுமதித் திட்டத்தினூடாக, சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பொருட் தெரிவுகளைக் கொண்ட கட்டமைப்பிலிருந்து சிறுவர்களுக்கு தமக்கு பிடித்த தெரிவுகளை மேற்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம், சில பொருட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட பாரம்பரிய அன்பளிப்பு முறைகளுக்கு அப்பால் சென்று, பிரத்தியேகமான அனுபவத்தை அவர்களுக்கு வழங்குகின்றது.

வாடிக்கையாளர்களுக்கு தமது வீட்டில் சௌகரியமாக இருந்தவாறே, தமக்கு தேவையான பொருட்களை தெரிவு செய்து பெற்றுக் கொள்ளும் வசதி வழங்கப்படுவதுடன், வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ள வங்கிக் கிளைக்கு விஜயம் செய்ய வேண்டிய தேவையையும் இல்லாமல் செய்துள்ளது.

தகைமை வாய்ந்த சிறுவர் சேமிப்பு கணக்குதாரர்களுக்கு Daraz ஒன்லைன் அன்பளிப்பு வவுச்சர்களை ரூ. 1000 முதல் ரூ. 80000 வரை அமானா வங்கி வழங்கும். வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் நியமிக்கப்பட்ட சேமிப்பு தொகையை எய்தும்போது இந்த வெகுமதிகள் தீர்மானிக்கப்படும். தகைமை தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு ளுஆளு வாயிலாக அறிவிக்கப்படும்.

# 'Be a Millionaire' அறிமுகம்




மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைமுறை அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதற்காக SLT-MOBITEL இனால் அவுரநெள இல் பாவனையாளர்களுக்கு தனது புதிய 'Be a Millionaire' ஊக்குவிப்புத் திட்டத்தினூடாக பணப் பரிசுகளை வெல்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

வாடிக்கையாளர்களுக்கு தமக்கு பிடித்த பாடலை அல்லது ஓடியோ உள்ளம்சத்தை, தமது Caller Ring Back Tone (CRBT) ஐ மாற்றியமைத்துக் கொள்வதற்கு அனுமதிக்கும் டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவையாக mTunes அமைந்துள்ளது..

mTunes கட்டமைப்பில் பெருவாரியான பாடல் தெரிவுகள் காணப்படும் நிலையில், 'Be a Millionaire' ஊக்குவிப்புத் திட்டத்தினூடாக பாவனையாளர்களுக்கு தமக்கு விரும்பிய பாடல்களை கேட்டு மகிழ்வதுடன், பெருமளவு பணப் பரிசுகளை வெல்லும் வாய்ப்பை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

2023 செப்டெம்பர் 1ஆம் திகதி முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை, mTunes களில் 'Be a Millionaire' ஊக்குவிப்புத் திட்டத்தினூடாக பங்குபற்றும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சிறந்த பரிசுகள் வழங்கப்படும்.

மாபெரும் இறுதிப் பரிசாக ஒரு மில்லியன் பரிசுத் தொகை (ரூ. 1,000,000) வழங்கப்படும். இரண்டாம் வெற்றியாளருக்கு ரூ. 100,000 மற்றும் மூன்றாம் வெற்றியாளருக்கு ரூ. 50,000 தொகை வழங்கப்படும். மேலும் ஏழு அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு தலா ரூ. 10,000 வீதம் வழங்கப்படும்.




# நேஷன்ஸ் ட்ரஸ்ட் -அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் உடன் இணையும் Quickee

Quickee இலங்கையில் உள்ள இணைய வர்த்தக கொள்வனவில் புரட்சியை ஏற்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்களின் வசதிக்கு முன்னுரிமை அளிப்பதற்குமான தனது முயற்சியின் அடிப்படையில், அண்மையில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் (American Express) கடன் அட்டைகளை Quickee.com தளத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் (Nations Trust Bank American Express) மற்றும் Quickee இடையேயான இந்த கூட்டாண்மையானது மேம்பட்ட வசதியை வழங்குவதன் மூலம் அதன் வாடிக்கையாளர்களுக்கு மகத்தான பெறுமதியை சேர்க்கும்.

இலங்கையர்களின் விருப்பமான இணைய வர்த்தக சந்தையான Quickee.com, அதன் ஒருங்கிணைந்த விநியோக சேவையை பூர்த்தி செய்யவும், தனித்துவமான டிஜிட்டல் வர்த்தக தளத்தை உரிய முறையில் நடாத்திச் செல்லும் வகையிலும், தனது சொந்த விநியோக குழுவினரையும் சொந்த அழைப்பு மையத்தையும் கொண்ட அர்ப்பணிக்கப்பட்ட பௌதீக மையத்துடன் தனித்துவமாக செயற்பட்டு வருகிறது.

அந்த வகையில் அதன் அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் 'Convenience Delivered' (சௌகரிகமாக கொண்டு சேர்க்கப்படும்) எனும் அதன் வாக்குறுதியுடன், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடனட்டையுடன் இணைந்து, புதிய சலுகைகளின் மூலம் அதன் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட வசதியை வழங்குவதற்கு உறுதி பூண்டுள்ளது.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் ஆனது, உயர் மட்ட வாடிக்கையாளர் சேவை வழங்கும் வங்கி அட்டைகள் துறையில் முன்னணியில் உள்ளதோடு, அதன் ஒப்பற்ற வாடிக்கையாளர் சேவை மற்றும் வெகுமதிகள், நன்மைகள், அதன் வங்கி அட்டை வாடிக்கையாளர்களுக்கான சலுகைகளை வழங்குவதில் புகழ்பெற்று விளங்குகின்றது.